ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1818/2 - 2013 ජූලි මස 08 වැනි සඳුදා - 2013.07.08

*1818/2 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 08 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

**பொறியியல் தொழிலுக்கான சம்பளச் சபை**

சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் (136 ஆம் அத்தியாயமாகிய) 9 ஆம் பிரிவின் கீழ் திரு. ஆர். ஏ. யூ. பெரேரா மற்றும் செல்வி கே. கே. ஏ. டீ. சி. குமாரசிங்க என்பவர்களுக்குப் பதிலாக திருமதி ஆர். என் கம்லத் அவர்கள் பொறியியல் தொழிலுக்குரிய சம்பளச் சபையின் தொழில் தருநர்களின் பிரதிநிதியாகவும், டபிள்யூ. உபுல் பிரியசாந்த என்பவருக்குப் பதிலாக திரு. ஆர். ஏ. பி. கே. ரணதுங்க என்பவர் ஊழியர்களின் பிரதிநிதியாகவும் முறையே கௌரவ தொழில், தொழில் உறவுகள் அமைச்சரினால் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை , 1971 ஆம் ஆண்டின் சம்பளச் சபைகள் ஒழுங்குவிதிகளின் 30 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் இத்தால் அறிவிக்கின்றேன். இந்த நியமனங்கள் 2014.06.30 ஆந் திகதி வரைக்குமே செல்லுபடியானதாகும்.

டபிள்யூ. ஜே. எல். யூ. விஜயவீர,
செயலாளர்,
தொழில், தொழில் உறவுகள் அமைச்சு.

தொழிற் செயலகம்,
கொழும்பு 5,
2013, மே 31.

7 - 690/1

---

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

**மோட்டார் போக்குவரத்துத் தொழிலுக்கான சம்பளச் சபை**

1941 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் (136 ஆம் அத்தியாயமாகிய) 9 ஆம் பிரிவின் கீழ் கௌரவ தொழில் அமைச்சருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் பின்வரும் ஆட்கள், மோட்டார் போக்குவரத்துத் தொழிலுக்கான சம்பளச் சபையின் உறுப்பினர்களாக இருப்பதற்கு 2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 16 ஆந் திகதியிலிருந்து

தொடங்குகின்ற 3 ஆண்டுக் காலப்பகுதிக்கு கௌரவ தொழில், தொழில் உறவுகள் அமைச்சரினால் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என 1971.06.04 ஆந் திகதிய 14961 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 30 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

டபிள்யூ. ஜே. எல். யூ. விஜயவீர,
செயலாளர்,
தொழில், தொழில் உறவுகள் அமைச்சு.

தொழிற் செயலகம்,
கொழும்பு 5,
2013, யூன் 25.

**நியமன உறுப்பினர்கள் :**

1. திரு. ஆரியரத்ன விதானகே
2. திரு. ஏ. திசாநாயக்கா
3. திரு. எம். ஏ. சந்திரபால

**தொழில் தருநர்களின் பிரதிநிதிகள் :**

1. திரு. ஹேவ கமகே சமந்த குமார
2. திருமதி ஏ. எம். என். யூ. அத்தநாயக்கா
3. திரு. பி. எம். கே. எஸ். கே. வலகுல்பொல
4. திரு. நிரஞ்சன் அஜித் டீ சில்வா
5. திரு. யூ. கே. லியனாராய்ச்சிகே
6. திரு. டபிள்யூ. டீ. டீ. டீ அல்விஸ்
7. திரு. நிரஞ்சன் பொன்சேகா
8. திரு. ஏ. ஆர். ஏபேர்ட் டீ சில்வா

**ஊழியர்களின் பிரதிநிதிகள் :**

1. திரு. எச். ஏ. பியதாச
2. திரு. டபிள்யூ. கே. பியரத்ன
3. திரு. கே. ஜி. பியதாச
4. திரு. எஸ். ஆர். ரஞ்ஜித் சொய்சா
5. திரு. எம். கே. ஹேமபால
6. திரு. வெங்கடாசனம் ஜீவானந்தராஜா
7. திரு. சுமனதாச ரணசிங்க
8. திரு. பி. ஐ. ஆப்தீன்

7- 690/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.